# 19 நாட்டார் சமய வழிபாடு

ஈழத்து இந்து மக்களால் இருவகையான வழிபாட்டு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. விதிமுறைக்குட்பட்ட வழிபாட்டுமுறை, விதி முறைகளுக்கு உட்படாத வழிபாட்டு முறை என்பனவே அவை இரண்டுமாகும். விதிமுறைக்கு உட்படாததை ஆகமம் சாராத வழிபாடு எனவுங் கூறலாம். இது நாட்டார் வழிபாடு, கிராமிய வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, மாலைத் தெய்வ வழிபாடு, எல்லைப்புற வழிபாடு போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. ஆகம வழிபாட்டில் எவ்வாறு கிரியைகள் பிரதான இடம் பெறுகின்றனவோ, அவ்வாறே நாட்டார் வழிபாட்டில் சடங்குகள் பிரதான இடம் பெறுகின்றன.

நாட்டார் வழிபாடு யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, மலையகம் எனத் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் காணப்படுகின்றன. பிரதேசத்துக்குப் பிரதேசம் அவ்வப் பிரதேச மக்களின் வழக்காறு, சமூக அமைப்பு என்பவற்றின் அடிப்படையில் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. பயம், நம்பிக்கை, மரபு என்பவற்றின் மூலம் குறிக்கப்பட்ட தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்து, குளிர்த்தி செய்து, பலி கொடுத்து வழிபடுகின்றனர். நாட்டார் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், என வகைப்படுத்தி வழிபடுகின்றனர். ஆண் தெய்வங்களே எண்ணிக்கையில் அதிகமாயினும், பெண் தெய்வங்களும் வழிபடப்பட்டு வருகின்றன. சிறிய கட்டடங்கள் அல்லது பந்தல் அமைப்பான இடங்களில் தான் இவை குடிகொண்டிருக்கின்றன.

இவ்வழிபாட்டில் ஆண்டுப் பொங்கல் பிரதானமானது. இப்பொங்கல் வருடத்தில் மாசி, பங்குனி, வைகாசி மாதங்களுக்கிடையில் நடைபெறும், இச்சடங்கை பூசாரிமாரே பிரதானமாக நிகழ்த்துவர். (நாட்டார் தெய்வங்கள் பற்றியும், சடங்குகள் பற்றியும் முன்னைய வகுப்புகளில் நீங்கள் படித்திருப்பீர்கள் அல்லவா?)

நாட்டார் தெய்வ வழிபாடு பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபாடு கொண்டதாயினும் அது மேல்வரும் பொது இயல்புகளையும் கொண்டிருப்பதைக் காணலாம்.

- ஒரு குடும்பம், சாதி என்பவற்றுக்கு மட்டும் உரியவை.
- பிராமணர் அல்லாதோரால் பூசை செய்யப்படுபவை.
- உயிர்ப்பலியினைப் பெரிதும் ஏற்பவை.
- நித்திய வழிபாடு அற்றவை.

- ஒரு பிரகாரத்தை மட்டும் உடையவை.
- சடங்குகள் உத்தரவு பெற்றே நிகழ்பவை.
- ஆசாரங்கள் பெரிதும் அற்றவை.
- பெரிதும் மந்திரங்களால் உச்சாடனம் செய்யப்படுபவை.
- பகைமையை அழிக்கும் தன்மை கொண்டவை.

நாட்டார் வழிபாட்டில் ஆண் தெய்வங்களும் அவற்றுக்கான ஆலயங்களும் ஆங்காங்கே காணப்படுவது போல் பெண் தெய்வ ஆலயங்களும் பரந்துபட்டளவிற் காணப்படுகின்றன. ஒரு சில கற்தெய்வ ஆலயங்களும் காணப்படுகின்றன. பெண் தெய்வங்களுள் கண்ணகியும், சீதையும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுக்கான பல்வேறு ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வேலம்பரை, வற்றாப்பளை, மட்டுவில், காரைதீவு, களையோடை, செட்டிபாளையம் ஆகிய இடங்களிற் காணப்படும் கண்ணகி அம்மன் ஆலயங்களும், நுவரெலியாவிற் காணப்படும் சீதையம்மன் ஆலயமும் குறிப்பிடத்தக்கன. பெரும்பாலும் பத்தினித் தெய்வ வழிபாடாகக் காணப்படும் இப்பெண் தெய்வ வழிபாடு சிறப்பாக ஈழத்துச் சைவ மக்களிடையே பேணப்பட்டு வருகிறது.

கண்ணகி வழிபாட்டில் கண்ணகி வழக்குரை காவியம், சிலம்புகூறல், கோவலன் கதை, குளிர்த்திப்பாடல், ஊர்சுற்றுக்காவியம், மழைக்காவியம் போன்றன பாராயணம் பண்ணப்படுவதுடன், இவ்வழிபாட்டு முறைகளால் வைசூரி, கண்நோய், குக்கல், வெப்பு, சின்னம்மை, வயிற்றுக்கடுப்பு, பெருஞ்சுரம் என்பன நீங்குவதோடு, மழை பெய்து வேளாண்மை பெருகும் என்ற நம்பிக்கைகளும் காணப்படுகின்றன. கண்ணகி, இராஜேஸ்வரி, மனோன்மணி, நாகேஸ்வரி, நாகபூஷணி போன்ற ஆகம மயப்படுத்தப்பட்ட பெயர்களாலும் அழைக்கப்படும் மரபும் காணப்படுகிறது.

இலங்கையில் காணப்படும் கண்ணகி அம்மன் ஆலயங்களில்

(1) காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்.

(2) வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்.

என்பன பிரசித்தமானவை.

## 1. காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்.

### அ. ஆலய அமைவிடம்



கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்காகச் செல்லும் நெடுவீதியில் 27ஆவது மைல் தொலைவில் அம்பாறைக்குச் செல்லும் வீதி பிரியும் சந்தியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. கண்ணுக்கு எட்டியதூரம் வரை வயல்வெளிகளும் மறுபக்கம் கடற்கரை சார்ந்த தென்னை மரச்சோலைகளும், மூதூர்க்

குடியிருப்புடன் காணப்படும் பசுமைமிகு சூழலில் காணப்படும் இவ்வாலயம் சிறந்த வரலாற்றைக் கொண்டது.

**ஆ. ஆலய வரலாறு.**

மிகப்பழைய வரலாற்றைக் கொண்ட இவ்வாலயம் பற்றிக் கண்ணகி வழக்குரை, வசந்தன் கவித்திரட்டுப் போன்ற நூற்பாடல்களில் அறியலாம். இவ்வாலயச் சிலை முதலாம் கஜபாகு மன்னனால் கொண்டுவரப்பட்டதென்பது ஐதிகமாகும். இந்தியாவிலிருந்து கண்டிக்கு வந்த கண்ணகி வழிபாடு, கண்டியிலிருந்து வீரமுனைக்கு வந்து காரைதீவுக்கு வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

**இ. கர்ணபரம்பரைக்கதை.**

ஆதியில் கண்ணகி சிலையுடன் ஒரு கிழவியும் அவளது மகளும் கதிர்காம யாத்திரைக்காக வந்தனர். வந்தவர்கள் காரைதீவில் வேப்ப மரத்தின் கீழ் தமது மூட்டை முடிச்சுகளை வைத்துத் தங்கினர் எனவும், இவர்கள் தாங்கள் கொண்டுவந்த கண்ணகி சிலையை அம்மரத்தடியில் வைத்து முறத்தால் மூடி தினசரிப்பூசை செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் எனவும் அறிய முடிகின்றது.

அந்நாட்களில் ஒரு நாள் பூசை நேரத்தில் அட்டப்பள்ளத்திலிருந்து (சிங்காரதோப்பு) இப்பகுதியை ஆண்ட வன்னிமை யானை மீதேறி நாட்டுவளம் காண அவ்வழியே சென்ற போது யானை அவ்விடத்தில் மண்டியிட்டுக் கிடக்கலாயிற்று. வன்னிமை செய்வதறியாது திகைத்து நின்றபோது, பூசை வழிபாட்டுக்காக நின்ற சிலரின் வேண்டுகோளுக்கமைய பூசை செய்த கிழவியான அம்மையார் தான் சிலைக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தை எடுத்துச் சென்று யானையின் மீது தெளித்ததும் அது எழுந்தது. இதனால் பக்திப்பரவசம் அடைந்த வன்னிமை வைத்த நேர்த்திக்கடனால் இவ்வாலயத்திற்கு நிலையான கட்டடம் அமைக்கப்பட்டதுடன், அவ்வாலயத்தில் பூசையும் தொடர்ந்து நடைபெறலாயிற்று.

**ஈ. ஆலய பரிபாலனம்.**

சிலையைக் கொண்டுவந்த கிழவியின் மகளின் சந்ததியினரே இக்கோயிலுக்கு இன்றும் தொண்டு செய்கின்றனர். அவர்களது சந்ததியைச் சேர்ந்த மூன்று கப்புகமார்கள், மூன்று தருமகர்த்தாக்கள், மூன்று கணக்குப் பிள்ளைமாரோடு ஆறுபேர் அடங்கிய ஒரு குழுவும் உள்ளிட்ட பதினைந்து பேர் கொண்ட பரிபாலன சபையினரால் ஆலயம் பரிபாலிக்கப்படுகிறது.

## உ. ஆலயமகிமை.

அக்காலத்தில் தேசத்து வன்னிமையாக விளங்கிய ''கங்கன்'' தன் மனைவியுடன் கோயிற் பூசைக்குச் சமுகமளித்த நேரத்தில் அவனது மனைவியின் கண்கள் இரண்டும் பார்வையிழந்து போயின. தன் மனைவியின் பரிதாப நிலை கண்டு கலங்கி மனம் வருந்திய கங்கன் கண்ணகித் தாயாரின் அருள் வேண்டி நேர்த்திக்கடன் புரிந்தான். கண்ணகித் தாயாரின் அருளால் வன்னிமையான கங்கனின் மனைவியின் பார்வை கிடைக்கப் பெற்றமையால் ஈற்றில் 101 ஏக்கர்க் காணியை ஆலயத்திற்கு மானியமாக உரிய நேர்த்திகளோடு கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. இவ்வாலயத்தின் தலவிருட்சமாக வேப்பமரம் காணப்படுகிறது.

## ஊ. பூசைகளும் ஆலய விழாக்களும்.

ஆதியிலிருந்தே வருடத்திற்கொரு முறையே கோயிற் கதவு திறக்கப்பட்டு பத்து நாள் சடங்கும், குளிர்த்தியும் வைத்த பின்னர் கதவைப் பூட்டிவிடும் வழக்கமும் காணப்பட்டது. பின்னர் வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் செய்து வெளியில் வைத்துப் படையலிடும் வழக்கமுங் காணப்பட்டது. காலப் போக்கில் வெள்ளிக் கிழமைகளில் பூசகர் வந்து ஆலயக்கதவினைத் திறந்து பூசை செய்யும் நடைமுறையும் உருவாகியது. இன்று ஆகமம் சாரா நெறிமுறைகளிலிருந்து ஆகமஞ் சார் நெறி முறைகளை நோக்கி மாற்றமடைந்து வரும் வழிபாட்டு முறைகளைக் கொண்டுள்ள இவ்வாலயத்திற்கு விமானம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் என்பன அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டுவிட்டது. புதிய மாற்றங்களுக்கும் அமைப்புகளுக்கும் ஆலயம் உட்பட்டிருந்தாலும் பாரம்பரிய வழிபாட்டு முறைகளே இன்றும் பின்பற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றும் பூசைகள் மூன்று காலங்களிலும் அந்தணர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. அத்தோடு மாத சங்கிராந்தி அபிஷேகங்களும் பூரணைத் தினங்களில் விசேட அபிஷேகப் பூசையும் நடத்தப்படுகிறது. பங்குனி உத்தரத்தன்று தீர்த்த உற்சவம் இடம்பெறத்தக்க வகையில் வருடாந்த மகோற்சவம் பத்து நாட்கள் நடாத்தப்படுகிறது.

இவ்வாலயத்தில் இடம்பெறும் உற்சவங்களுள் வைகாசி மாதத்தில் ஆற்றப்படும் **வைகாசித் திங்கள் திருக்குளிர்ச்சி** விழாவே சிறப்பானதாகும். அது நாட்டார் மரபில் அமைந்ததோடு அதனை **கப்புகனார்** தலைமைதாங்கி நடத்துகிறார். திருக்குளிர்ச்சி சடங்கு எட்டு நாட்கள் நடாத்தப்படும். முதலாவது நாளாகிய திங்கட்கிழமை மாலை காரைதீவு சமுத்திர தீர்த்தத்திலிருந்து தீர்த்தம் எடுத்து வரப்படுதலும் அதனைத் தொடர்ந்து கல்யாணக் காலுக்குரிய பூவரசமரம்

வெட்டப்பட்டுக் கல்யாணக்கால் சுப வேளையில் நாட்டப்படுதலும் இடம்பெறும். அதன் பின்னர் கண்ணகி வழக்குரை, ஊர் சுற்று காவியம் என்பன படிக்கப்படும். ஐந்தாம் நாள் கோவலனுக்கும் கண்ணகிக்கும் கல்யாணச்சடங்கு இடம்பெறும். ஆறாவது நாள் கப்பற் சடங்கும், ஏழாவது நாள் பச்சைகட்டற் சடங்கும் இடம்பெறும். எட்டாம் நாள் அதிகாலை இடம்பெறும் குளிர்த்திச் சடங்கே இங்கு இடம்பெறும் இறுதிச் சடங்காகும். அதிகாலை நான்கு மணியளவில் திருக்குளிர்ச்சி பாடப்படும் இதனை, திருக்குளிர்ச்சி பாடுவோர் மரபில் வந்தவர்களே பாடுகின்றனர். இங்கு வழங்கப்படும் **திருக்குளிர்ச்சித் தீர்த்தம்** தீராத நோய்களெல்லாம் தீர்த்து வைக்கும் மகிமை வாய்ந்தது. இன்றைய தினம் அடியவர்கள் தம் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுதல், பொங்கல் பொங்கி மடை பரவுதல் என்பனவற்றை நிறைவேற்றி, கண்ணகைத் தாயின் அருட்கடாட்சத்தினை வேண்டி நிற்பர்.



கண்ணகி வழக்குரை படிக்கப்படும் புராதன ஆலயம்



எழுந்தருளி அம்மன் (கண்ணகி)







ஆகம விதிக்கமைய அமைக்கப்பட்ட புதிய ஆலயம்



காரைதீவு சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தம் எடுக்கச் செல்லுதல்.



திருக்குளிர்த்திச் சடங்கும், திருக்குளிர்ச்சித் தீர்த்தமும்.



தல விருட்சம் - வேம்பு

## 2. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்.

### அ. ஆலய அமைவிடம்.



வன்னிப் பிரதேசத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளை என்ற கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய கிராமங்கள் இந்த ஆலயத்தின் அயற் கிராமங்களாகும். நந்திக்கடலும், வயல்வெளிகளும், பாலைமரச் சோலையும் சூழ்ந்த பசுமையான சூழலில் ஆலயம் அமைந்துள்ளது.

### ஆ. ஆலய வரலாறு.


அடங்காப்பற்று என அழைக்கப்படும் இவ் வன்னிப் பிரதேசத்தை வன்னிமைகள் ஆட்சி செய்தபோது யாழ்ப்பாண மன்னர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோருக்கு கப்பம் செலுத்தினர். இவர்களின் பின் வருகைதந்த ஆங்கிலேயர்களை எதிர்க்குமளவிற்கு வீரம் கொண்டவர்களாகப் பிற்காலத்தில் விளங்கினர். இத்தகைய வன்னி மன்னர்களால் பரிபாலிக்கப்பட்ட இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் காலத்தில், போர்த்துக்கேய தளபதியாகிய நெவில் என்பவன் அழிக்க முற்பட்ட போது ஆலயத்தில் நின்ற பன்னிச்சை மரம் தனது காய்களை வீசி ஆலயத்தை அழிக்க விடாது தடுத்தது. இவ்வற்புத வரலாற்றை ஆலயத்தில் இன்றும் படிக்கப்படும் **பன்னிச்சை ஆடிய பாடற்சிந்து** மூலம் அறிய முடிகிறது.

### இ. கர்ண பரம்பரைக்கதை.

வற்றாப்பளை நந்திக்கடலோரத்தில் அமைந்துள்ள வயல்வெளிகளில் இடைச் சிறுவர்கள் தமது மாடுகளை மேய்ப்பதற்காக அழைத்துச் செல்வர். ஒருநாள் வழக்கம்போல் இவர்கள் மாடுகளை மேயவிட்ட பின்னர் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்களை நோக்கி வெள்ளைச் சேலையுடனும் தளர்ந்த நடையுடனும் கையிலுள்ள தடியை ஆதாரமாக ஊன்றியபடி வயதில் முதிர்ந்த பெண்ணொருத்தி வந்தார். அவரை வரவேற்ற இடைச் சிறுவர்கள் அருகிலுள்ள வேப்ப மரத்தடியில் உழவுக் கலப்பைக்கு வெட்டி உள்ள **வேப்பம்படவலு**க்கு (வேப்பங்குற்றி) மேல் இருத்தினர். தனக்குப் பசி என பாட்டி கேட்டவுடன், பசுக்களில் பாலைக் கறந்து அவசரமாகப் பொங்கி, பொங்கலைப் படைக்க அருகில் உள்ளமரத்தில் இலைகளைப் பிடுங்கி பாட்டியிடம் கொடுக்க, அவற்றைக் கோர்வை செய்து தட்டாக்கினாள். இதில் தனக்குப் பொங்கலைத் தருமாறு கேட்டாள். சந்தோஷமாகச் சாப்பிட்டாள்.

களைப்பு நீங்கிய பாட்டி தன் தலையிலுள்ள பேனை எடுக்குமாறு இடைச்சிறுவர்களைக் கேட்டாள். இடையர்கள் அவளது தலைமயிரை விரித்த போது பல கண்கள் இருப்பதைக் கண்டு பயந்து ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்தினர். ஊர்மக்கள் வந்து பார்த்த போது பாட்டி அவ்விடத்தில் இல்லை. பாட்டி இருந்த இடத்தில் வேப்பம் படவாள் தழைத்திருந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர்.

பாட்டி இருந்த வேப்ப மரத்தடியில் கோயிலமைத்து வருடந்தோறும், வைகாசி மாத பௌர்ணமி தினத்திற்கு அண்மையில் வரும் திங்கட்கிழமையில் பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். வேப்ப மரத்தடியில் கொட்டில் அமைத்து நாட்டுப்புற மரபில் வழிபடப்பட்ட ஆலயம் தற்போது ஆகம மரபுகளுக்கமைய தூபி, அர்த்த மண்டபம், மகா மண்டபம், இராஜகோபுரம் என்பன அமைக்கப்பட்டு விநாயகர், நாகதம்பிரான் முதலான பரிவார ஆலயங்களுடன் திகழ்கிறது. ஆலயத் தலவிருட்சமாக வேப்பமரம் (வேப்பம் படவாள்) காணப்படுகிறது.


புராதன கண்ணகி அம்மன் திருவுருவம்


கருவறையிலுள்ள கண்ணகியம்மன் (உமை)


எழுந்தருளி அம்மன்


வாசற் கோபுரச் சிற்பம்


ஆலயத் தூபி


மஞ்சம்


சிலாவத்தை தீர்த்தக்கரையில் விளக்கேற்றுவதற்காகத் தீர்த்தமெடுத்தல்.


வெளி வீதி

### ஈ. ஆலய பூசைகளும் விழாக்களும்.

இவ்வாலயத்தில் முன்னைய காலங்களில் கட்டாடும் உடையாரே (பூசாரி) பூசைச் சடங்குகளைச் செய்தனர். ஆனால் இன்று அபிஷேகம், ஆராதனை, அலங்காரம், வேதபாராயணம் என்பவற்றை அந்தணர்களே செய்கின்றனர். ஆகமமுறைக்கு மாற்றம் பெற்றாலும், வைகாசிப் பொங்கற் சடங்கு சிறப்பான அம்சமாக நடைபெறுகிறது. இது பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டது. பொங்கல் பற்றி அயற் கிராமங்களுக்கு அறிவிக்கும் பாக்குத் தெண்டல், முல்லைத்தீவு சிலாவத்தை தீர்த்தக் கரையில் (கடல்நீர்) இருந்து மண்முட்டிகளில் நீர் எடுத்து ஊர்வலமாக தீர்த்தக்குடம் வருதலும், இக்குடங்களுடன் அருகில் உள்ள காட்டு விநாயகர் ஆலயத்துக்கு கொண்டு சென்று கடல் நீரில் விளக்கேற்றுதலும் பின் சிலம்பு கூறலைப் படித்து, பறை, உடுக்கு என்பவற்றைப் பயன்படுத்தி, இசை வழங்கி கண்ணகி அம்மன் ஆலயத்திற்குக் கொண்டு வருவர். கண்ணகியம்மன் ஆலயத்தில் கடல் நீரில் விளக்கேற்றி பூசாரிமாரால் கும்பம் வைக்கப்படும். கச்சுநேரல், மடைபரவுதல், கட்டுச் சொல்லுதல் மேற்கொள்ளப் பட்டபின், வளர்ந்து நேரல் இடம் பெறும். வளர்ந்து நேர்ந்தவுடன் ஆலய வெளி வீதி எங்கணும் பல்லாயிரக் கணக்கான பொங்கல்ப்பானைகள் அடுப்பில் ஏற்றப்படும். பொங்கல் பொங்கி தூளிபிடித்தல், திருக்குளிர்த்தி பாடுதல், அம்மானை பாடுதல், மஞ்சத்தில் எழுந்தருளி அம்மன் பவனி வருதல் போன்றவற்றுடன் வைகாசிப் பொங்கல் முடிவடையும்.

தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த கண்ணகி அம்மனின் பக்தனும் ஞானியுமாகிய பக்தஞானி என்பவருக்குரிய பொங்கல், **பக்த ஞானியார் பொங்கல்** என்ற பெயரில் அடுத்து வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும். பொங்கல் வேளையின் பின் வட்டக்களரியில் கோவலன் கூத்து ஆடப்படுவதுடன், கரகம், கும்மி, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## நாட்டார் தெய்வ வழிபாட்டில் சடங்குகளை ஆற்றுப்படுத்துவோர்.

நாட்டார் தெய்வ வழிபாட்டில் சடங்குகள் முக்கியமானவை. இச்சடங்குகளை நிறைவேற்றுவோர், ஆற்றுப்படுத்துவோர் எனப்படுவர். பிரதேச ரீதியாக இவர்களால் ஆற்றப்படும் சடங்குகள் மேல்வருமாறு அமைகின்றன.


1. பூசாரிமார் வழிபாட்டுமுறை.
2. கட்டாடிமார் வழிபாட்டுமுறை.
3. கப்பூகனார் வழிபாட்டுமுறை.

4. ஆதிக்குடிகள் வழிபாட்டுமுறை.

5. வேறு வழிபாட்டு முறைகள்.

எனப் பல்வேறு வழிபாட்டு முறைகள் நாட்டார் சமய வழிபாட்டில் ஆற்றுப் படுத்துவோரால் நிறைவேற்றப்படுகின்றன.

## 1. பூசாரிமார் வழிபாட்டு முறை



மந்திரங்கள் ஊடாகத் தெய்வங்களுடன் தொடர்புபட்டு வழிபாட்டை நிகழ்த்துபவர்கள் பூசாரிகள் எனப்படுவர். இவர்கள் எட்டுமுழ வேட்டி கட்டி அதன்மேல் சால்வையை அணிந்து கொள்வதுடன், திருநீற்றுப் பூச்சுடன் கழுத்திலும், சிரசிலும் உருத்திராக்க மாலையுடன் காணப்படுவர். கைகளில் சூலம், வெள்ளிப் பிரம்பு, கைச்சலங்கை, கைமணி, சாட்டை என்பவற்றையும் வைத்திருப்பர். இவர்களால் வீரபத்திரர், சுடலைமாடன், மதுரைவீரன், வதனமார், பெரியதம்பிரான், முத்துமாரி, பத்திரகாளி, திரௌபதை, மகாமுனி, பெரியண்ணசாமி, கருப்பண்ணசாமி, முனியாண்டிசாமி போன்ற தெய்வங்களுக்கும் சடங்குகள் நடத்தப்படுகின்றன.

சடங்கை மேற்கொள்ளும் போது குறித்த தெய்வங்களுக்கு மந்திரங்களின் மூலம் மடை பரப்பப்படும். இவர்கள் தெய்வம் ஆடுபவர்களுக்கு உருக்கொடுப்பர். பலி கொடுக்கும் போது உரிய தெய்வங்களுக்குரிய மந்திரங்களை உச்சாடனம் செய்வர். தெய்வம் ஆடாதவர்களையும் ஆடச்செய்வர். இவ்வாறான வேளைகளில் மன ஒருமைப்பாடு மிக்கவர்களாகக் காணப்படுவர். ஆலய ஆண்டுப் பொங்கலின் போது கூத்துக்களை முன்னின்று நடத்தி அதனூடாகத் தெய்வ வழிபாட்டை வளப்படுத்துபவர்களாயும் இருப்பர்.

மாசி மாதத்தில் நடைபெறும் சாமிமலை மகாமுனி ஆலய ஆண்டுப் பொங்கலுக்கு முன்னைய நாளில் இடம் பெறுகின்ற பொன்னர் சங்கர் கூத்தும், தொடர்ந்து நடைபெறும் விழாக்களும் பூசாரிமாரால் நடத்தப்படுகின்றமை, பூசாரி வழிபாட்டு முறைக்குச் சான்றாயமைகிறது. சூனியம் செய்தல், வளவு காவல் பண்ணுதல், அட்சரக்கூடு செய்து கொடுத்தல், திருநீறு போடுதல், பேய்க்குப் பார்த்தல், போன்றவற்றையும் பூசாரிமார் முன் நின்று நடத்துவர். இவர்கள் உடுக்கு, மணி, தப்பு, சிலம்பு போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தித் தம் இஷ்ட தெய்வங்களை மன்றாடி, பாடல்கள் மூலம் அழைத்துத் தம் வேண்டுகோளை நேரடியாகத் தெய்வங்களிடம் முன் வைத்துத் தேவைகளை நிறைவேற்றுவர் என்ற நப்பிக்கையும் மக்களிடம் நிலவுகிறது.

## 2. கட்டாடிமார் வழிபாட்டு முறை



கட்டாடி எளவும் பூசாரிகன் அழைக்கப்படுவுர். இவர் பூசை செய்பவராகவும், பாரம்பரிய முறையிலமைந்த கிரியைகள் செய்பவராகவும் காணப்படுகிறார். இங்கு பக்தியால் தெய்வத்தைக் கெஞ்சிக் கேட்கும் முறை பின்பற்றப்படுகிறது. “**பாலன் புலம்புகின்றேன் பாலன் முகம் பார் தாயே**” போன்ற பாடலடிகள் இதற்கு உதாரணமாகும். கட்டாடி முறையில் பத்ததி இடம் பெறுவதால் அகவல், தாலாட்டு, காவியம் ஆகிய பாவனைகளும்: உடுக்கு, சிலம்பு, தவில், ஆகியவற்றின் ஒலிகளும் இடம் பெறுகின்றன.

df

## 3. கப்பூகனார் வழிபாட்டு முறை



கப்புகன் வழிபாடு என்பது வாய் திறவாத நிலையில் வாயைச் சீலையால் கட்டிக்கொண்டு பூசை வழிபாடுகளை நிகழ்த்துவதைக் குறிக்கும். இவ்வழிபாட்டுமுறை இரண்டு வகைப்படும்.

**அ. கருவறைத் திரையை திறந்து பூசை செய்யும் முறை** -

இங்கு உருவ உபாசனையும் ஐம்புலத்தறிவையும் கண்களே கொள்ளத்தக்கதாக ஏக இந்திரிய நிலையில் மனதை ஒருநிலைப்படுத்தி வழிபாடு செய்யப்படுகிறது.

**ஆ. கருவறைத் திரையை திறவாது பூசை செய்யும் முறை** -

இங்கு அருவ உபாசனை நடைபெறும். கப்பூகன் ஐம்புலன்களையும் அடக்கி ஞான நிலையில் மனதை ஒருவழிப்படுத்தி வழிபாடு செய்கிறான். கப்பூகன் வழிபாட்டு முறையானது மண்டூரில் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது.

## 4. ஆதிக்குடிகள் வழிபாட்டு முறை

ஆதிக்குடிகளான வேடர்கள் பொது வழிபாட்டை மேற்கொள்கின்றனர். குறித்த இடத்தில் ஆண்டுக்கொரு முறை தற்காலிகப் பந்தல்கள் அமைத்து வழிபடுவது பொது வழிபாடாகும். வீடுகளில் சிறிய பந்தல்களை அமைத்து கும்பம் வைக்காது மடைப் பொருட்களை மட்டுமே வைத்து மேற்கொள்ளப்படும்

## நாட்டார் தெய்வங்கள்



நாட்டார் தெய்வ ஆலயம்



முனியாண்டிச் சாமி



பெரியண்ண சாமி



கருப்পண்ண சாமி



திரௌபதை அம்மன்

## நாட்டுப்புறக் கலைகள்



காவடி



கரகாட்டம்



பொய்க்கால் குதிரையாட்டம்

இவ் வழிபாட்டில் குமார தெய்வம், நாச்சிமார், கன்னிமார், சீதை, மதுரைவீரன் ஆகிய தெய்வங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றனர்.

### 5. ஏனைய வழிபாட்டு முறைகள்

குடும்பத்தோடு ஒருவன் வழிபடுவதை சுய வழிபாட்டு முறை என்பர். வீடு, தொழிற்களம் திறந்த வெளி போன்றன சுய வழிபாட்டிற்குரிய இடங்களாகும். எழுத்து வடிவிலான எவ்விதிகளும் இங்கு பின்பற்றப்படுவதில்லை. இவ்வழிபாட்டில் ஈடுபடுவோரே தமக்குத் தெரிந்த அகவல், தேவார திருவாசகங்களைப் பாடி வழிபாட்டினை மேற்கொள்வர்.

இத்தகு வழிபாடுகளை விட **திருநீற்று ஆண்டிகள்** என்ற ஆண்டிகள் கூட்டத்தினர் தாம் கூடுகின்ற இடங்களிற் சில தெய்வங்களைப் பக்தியுடன் வழிபடுவர். இவ்வாறான பிற வழிபாட்டு முறைகளும் நாட்டார் வழிபாட்டு முறைகளாகக் கொள்ளப்படுகின்றன.

## நாட்டார் தெய்வ வழிபாடும் சமூகமும்

சைவத் தமிழ் மக்கள் வாழ்வியலுடன் நாட்டார் வழிபாடு பெரிதும் இணைந்துவிட்டது. இதனால் இவ்வழிபாடும் அதனோடு தொடர்பான தெய்வங்களும் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. நாட்டார் தெய்வ வழிபாட்டால் குடும்ப ஒற்றுமை, செய்யும் தொழில் விருத்தி, அன்றாடக் காரியங்கள் நிறைவேறுதல், தீராத நோய் தீர்த்தல் போன்றன இடம் பெறுகின்றன. பெரும்பாலான தெய்வங்கள் ஒரு குடும்பத்தினருக்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு சாதியினருக்கோ உரியவைகளாகக் கொள்ளப்படுகின்றன. அந்தணர்கள் அல்லாதவர்களால் பூசைகள் நிறைவேற்றப்படுகின்றமை, ஆசாரங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் சமூகத்தில் இவை இலகுவில் இணைந்து விட்டன. ஒரு பிரதேசத்தில் வழிபடப்படுகின்ற தெய்வங்கள் இன்னொரு பிரதேசத்தில் வழிபடப்படுவதில்லை. அதே நேரம் சில தெய்வங்கள் ஒரு பிரதேசத்தில் பிரதான தெய்வமாக வழிபடப்பட அதே தெய்வம் வேறொரு பிரதேசத்தில் பரிவாரத் தெய்வமாக வழிபடப்படுவதால் அத்தெய்வங்கள் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றுவிட்டன.

பெரும்பாலான தெய்வங்கள் பலியிடலை ஏற்பன. இன்று மிருகபலியிடல் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளது. சடங்கை அடிப்படையாகக் கொண்ட முத்துமாரி, சீதை, கண்ணகி, ஐயனார் போன்ற தெய்வங்கள் இன்று ஆகம நெறிக்குள் உட்படுத்தப்பட்டுவிட்டன. இக் காரணத்தினாலும் இவ்வழிபாடு சமூகத்தோடு ஒன்றிணைந்துவிட்டது. ஒவ்வொரு தெய்வங்களும் சிறந்த குணவியல்புகளைக் கொண்டவை. இதனால் வழிபடுபவர்கள் அதற்குரிய பலன்களைப் பெற்றுள்ளனர். சமரசம் பேணல், பகைமை தீர்த்தல், நம்பிக்கை

போன்ற காரணங்களும் இவ்வழிபாடு சமூகத்தோடு இணையக் காரணமாகி விட்டன. கிராமியக் கலைகளான கரகம், காவடி, கோலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கூத்துக்கள் மற்றும் கிராமிய விளையாட்டுக்கள் என்பன இவ் வழிபாட்டோடிணைந்து வளர்ச்சியடைந்தமையானது நாட்டார் தெய்வ வழிபாடு சமூகத்தில் செல்வாக்குப் பெறக் காரணமாயமைந்து விட்டது.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. நாட்டார் வழிபாடு வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்.?
2. நாட்டார் தெய்வங்களை எத்தனையாக வகைப் படுத்தலாம்? ஒவ்வொன்றிற்கும் இவ்விரு உதாரணங்கள் தருக.
3. ஈழத்திற் பிரசித்தி பெற்ற கண்ணகி அம்மன் ஆலயங்கள் இரண்டைப் பெயரிடுக.
4. கண்ணகி வழிபாட்டின் போது படிக்கப்படும் இரு இலக்கியங்களைத் தருக.
5. நாட்டார் வழிபாட்டை ஆற்றுப்படுத்துபவர்களில் இரு வகையினரைப் பெயரிடுக.
6. ஆகம நெறிக்குட்பட்ட நாட்டார் தெய்வங்கள் இரண்டைக் கூறுக.

**செயற்பாடு**

01) உமது பிரதேசத்தில் வழிபடப்படும் கிராமிய ஆண் தெய்வங்களையும், பெண் தெய்வங்களையும் அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

02) நாட்டார் சமய வழிபாடு என்ற தலைப்பில் ஒரு வில்லுப்பாட்டை ஆக்கி ஆசிரியரின் துணையுடன் செயற்பாடாக நிகழ்த்திக் காட்டுக.

**பாடச்சுருக்கம்**

- மக்கள் வாழ்வியலோடு இணைந்த வழிபாடு நாட்டார் வழிபாடாகும்.
- இவ்வழிபாடு பல பெயர்களால் அழைக்கப்படுவதோடு பல பொதுப்பண்புகளையும் கொண்டுள்ளது.
- காரைதீவு கண்ணகி அம்மன், வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆகிய இரண்டும் பிரசித்தி பெற்ற கண்ணகி அம்மன் ஆலயங்களாகும்.
- நாட்டார் வழிபாட்டை பூசாரிமார், கட்டாடிமார், கப்பூகன்மார், ஆதிக்குடிகள், சுயவழிபாட்டுக்காரர், ஆண்டிகள் ஆகியோர் ஆற்றுப்படுத்துகின்றனர்.
- சமூகத்தின் விருத்தியால் சில நாட்டுப்புறத் தெய்வங்கள் ஆகம நெறிமுறைக்குட்படுத்தப்பட்டு விட்டன.